2001 செப்டம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதம், திரு. எஸ்.கே. வேதரத்தினம். (குறுக்கீடு)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) கொள்கை விளக்கக் குறிப்புடன் மக்கள் சாசனம் என்னும் குறிப்பேட்டினை அளிக்கக் கோருதல்

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. பல்வேறு மானியக் கோரிக்கைகளில் விவாதம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக, மக்கள் சாசனம் என்ற ஒரு குறிப்பேடு, Policy Note–உடன் அனுப்பப்படுவது வழக்கமாக இருந்தது. மக்களுடைய நலத் திட்டங்களை ஒவ்வொரு துறையின் சார்பாகவும் அரசு அனுப்பும். அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கையேடாகக் கூட பயன்படும். அதோடு மட்டுமல்ல; ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு, வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு, கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்குக்கூட அது பயனுள்ளதொரு விஷயமாக இருக்கும். அரசு ஆண்டுதோறும் அறிவிக்கக்கூடிய திட்டங்கள், பொதுமக்கள் எல்லோரும் படித்துத் தெரிந்துகொண்டு பயனடையக்கூடியது. அந்த மக்கள் சாசனம் என்ற புத்தகம் என்பது மிக அவசியமானது. எங்களுக்கு வந்திருக்கிற Policy Notes–ஐயெல்லாம் பார்த்தோமென்று சொன்னால், சமூக நலத் துறையிலிருந்து மட்டுமே மக்கள் சாசனம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும்கூட மாறும். ஒவ்வொரு மானியத்திற்கும்கூட மாறுபடும். அப்படி நலத் திட்டங்களை அரசு அறிவிக்கிறபோது, புதிய புதிய திட்டங்களை மக்கள் படித்துப் பயன்பெற வேண்டுமென்றால், உங்கள் மூலமாக ஒவ்வொரு துறைக்கும் தெரிவித்து, அந்த மக்கள் சாசனம் என்ற புத்தகத்தை எங்களுக்குக் கொடுப்பதுடன், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற துறைகளுக்கும் அனுப்பினால் மக்கள் பயன் அடைவார்கள். ஆகவே, தங்கள் மூலமாக இது குறித்து எல்லாத் துறைகளுக்கும் ஆணையிடப்பட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.